සියලුම හිමිකම් ඇවිරිණි]
முழுப்பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

2022

ஆசிரியர் : ஏ.எம். சனூஸ்

அறிவுத்தாரகை 5
ARIVUTHTHARAHAI 5

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, MODEL, 2022

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை, 2022

கருத்தரங்குத் தொடர் 11

வினாத்தாள் - I

ஒரு மணித்தியாலம்

சுட்டெண் : .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.**
* ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

வினாத்தாள் - I இற்கான புள்ளித்திட்டம்

1.	3	11.	28	21.	53	31.	78
2.	5	12.	30	22.	55	32.	80
3.	8	13.	33	23.	58	33.	83
4.	10	14.	35	24.	60	34.	85
5.	13	15.	38	25.	63	35.	88
6.	15	16.	40	26.	65	36.	90
7.	18	17.	43	27.	68	37.	93
8.	20	18.	45	28.	70	38.	95
9.	23	19.	48	29.	73	39.	98
10.	25	20.	50	30.	75	40.	100

85 - 100 மிக நன்று

75 - 85 நன்று

75 கீழ் - முயற்சிக்கவும்

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீடு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	V/I/T/CH

[பக். 2 ஐப் பார்க்க

www.kedu.lk

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

zoom

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

www.lkedu.lk


1. தரப்பட்டுள்ள மூன்று உருக்களில் ஒன்றில் வேறுபாடு இன்றியும் மற்றைய உருவில் ஒரு வேறுபாடும் இன்னுமொரு உருவில் இரண்டு வேறுபாடுகளும் உள்ளன. இதில் இரண்டு வேறுபாட்டுக்குரிய உருவைத் தெரிவு செய்க.


(1)


(2)





(3)

2. ஒரு தொகுதியில் உள்ளடக்குவதற்கு மிகப்பொருத்தமான உருக்கள் எவை?




(1) மீனும் நண்டும் (2) நண்டும் இறாலும் (3) தேனீயும் வண்ணத்துப்பூச்சியும்


3. பின்வரும் உருக்களில் இரண்டிற்கு மாத்திரம் பொருத்தமான கூற்று எது?

(1) விலங்குணவு (2) தாவர உணவு (3) போசணை உணவு


4. பின்வரும் உருக்கள் இரண்டையும் ஊடுகாட்டும் தாளில் வரைந்து ஒன்றன்மீது ஒன்று வைக்கும்போது பெறப்படும் விடை யாது?


உரு 1


உரு 2


(1)


(2)



(3)

5. அடுத்துள்ள மூன்று இரட்டை எண்களின் கூட்டுத்தொகை 24 ஆகும். அவ் மூன்று இரட்டை எண்களுக்கும் இடைப்பட்ட ஒற்றை எண்களின் கூட்டுத்தொகையாக அமையக்கூடிய பெறுமானம் யாது?

(1) 12 (2) 16 (3) 21

சுட்டெண் : .....


6. அருகிலுள்ள சதுரமுகிக் குற்றிகளை துண்டுகளாக்கி நீள, அகல, உயரத்தில் இரண்டு குற்றிகள் வீதம் மூன்று குவியலாக்கப்பட்டு எஞ்சும் சதுரமுகிக் குற்றிகளை மீண்டும் ஒன்றன்மீது ஒன்று வைத்து ஒட்டி சுற்றிவர வர்ணம் பூசப்பட்டது.
இங்கு ஒட்டப்பட்ட சதுரமுகிகளில் வர்ணம் பூசப்பட்ட பக்கங்கள் எத்தனை?



(1) 18 (2) 15 (3) 14

7. காற்று வீசினால் மரங்கள் அசையும். மரங்கள் அசையவில்லை. எனவே,

(1) காற்று வீசுகின்றது (2) மரங்கள் அசைகின்றன (3) காற்று வீசவில்லை

8. 

தரப்பட்டுள்ள உருவில் கோடுகள் வழியே வெட்டி எடுக்கக்கூடிய முக்கோணங்களின் எண்ணிக்கை யாது?

(1) 5 (2) 6 (3) 10

9. உட்பக்கம் தெரியாத பையொன்றில் நான்கு சிவப்பு நிறப்பந்துகளும் மூன்று பச்சை நிறப்பந்துகளும் ஐந்து ஊதா நிறப்பந்துகளும் காணப்படுகின்றன. பிள்ளையொன்று வேறுபட்ட நிறத்திலான மூன்று பந்துகளைப் பெற வேண்டுமாயின் பையிலிருந்து வெளியே எடுக்கப்பட வேண்டிய பந்துகளின் எண்ணிக்கை யாது?

(1) 3 (2) 8 (3) 10


10. பின்வரும் கவிதையின் மூலம் எதனைப் பெறலாம் என பாடலாசிரியர் குறிப்பிடுகின்றார்?

தலைசீவி பள்ளிக்கே ஓடு - நல்
தங்கப்பதுமையாம் தோழர்களோடு!
விலையில்லா மெய்ப்பொருள் கல்வி! - அதை
விரும்பிப் படித்தால் அறிவுண்டாம் செல்வி

(1) அறிவை (2) தோழர்களை (3) விலைமதிப்பற்ற பொருட்களை

11. குறித்தவொரு வருடமொன்றின் நவம்பர் மாதத்திற்கான நாட்காட்டி மூன்று துண்டுகளாக கிழிந்துள்ளது. இவற்றில் ஒரு துண்டில் 1, 2, 7, 8, 9, 14, 15, 16, 17 என்பவற்றைக் காணக்கூடியதாக இருந்தது. இன்னொரு துண்டில் இருந்த இலக்கங்களின் கூட்டுத்தொகை 64 ஆகும். மீதித் துண்டில் இருந்த இலக்கங்களின் கூட்டுத்தொகை யாது?

(1) 89 (2) 292 (3) 312

12. 

இந்த உருக்கள் ஒவ்வொன்றிலும் சமச்சீர் அச்சுக்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் ஒழுங்கில் அவ்வுருக்கள் வரிசைப்படுத்தப்பட்டுள்ள விடையைத் தெரிவு செய்க.

(1) D B C A (2) D B A C (3) C A B D


13. அப்பிள்பழம் ஒன்றை வாங்கும் விலைக்கு மூன்று மாம்பழங்களை வாங்கலாம். அன்னாசிப்பழம் ஒன்றை வாங்கும் விலைக்கு இரண்டு அப்பிள்பழங்களை வாங்கலாம். 100 ரூபாய்க்கு ஐந்து மாம்பழங்களை வாங்க முடியும் எனின், அன்னாசிப்பழம் ஒன்றின் விலை யாது?

(1) 60 (2) 100 (3) 120

[பக். 4 ஐப் பார்க்க

www.ikedu.lk

14. சோதிடர் ஒருவர் மூன்று குடங்களில் பூக்களை இட்டு சோதிடத்தை கணித்துக் கூறுகின்றார்.




- பக்தர் கொண்டு வந்த பூக்களை சோதிடர் A குடத்தினுள் முழுமையாக இடவேண்டும். அது மூன்று மடங்காக அதிகரிக்கும்.
- A குடத்திலிருந்து ஒரு மடங்குப் பூக்களை எடுத்து B குடத்தினுள் இடும்போது அது மூன்று மடங்காக அதிகரிக்கும்.
- B குடத்திலிருந்து ஒரு மடங்குப் பூக்களை எடுத்து C குடத்தினுள் இடும்போது இருமடங்காக அதிகரிக்கும்.
- இறுதியில் மூன்று குடங்களிலும் உள்ள பூக்கள் சமமாக மாற்றப்பட்டால் சோதிடம் பளிக்கும்.


இவ்வாறு சோதிடர் பக்தர் கொண்டு வந்த பூக்களை இடும்போது இறுதியில் மூன்று குடங்களிலும் மொத்தமாக 18 பூக்கள் காணப்பட்டன எனின் பக்தர் கொண்டு வந்த பூக்கள் எத்தனை?

(1) 3 (2) 4 (3) 6

15. உரு A இல் உள்ள தராசினைப் பாருங்கள். அதில் இருபக்கங்களில் வைக்கப்பட்டுள்ள நிறைகள் சமமானவை.



உரு A



உரு B

அதன்படி உரு B ஐ சமப்படுத்த தேவையான நிறை யாது?



(1)




(2)



(3)


● **16, 17** ஆகிய வினாக்களில் கோலத்திற்கேற்ப வெற்றிடத்துக்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க.

16.



(1) 46
(2) 52
(3) 124

17.



(1) 7
(2) 6
(3) 3

18. அடுத்தடுத்து பிறந்த ஐந்து பிள்ளைகளில் மூத்த பிள்ளையினதும் இளைய பிள்ளையினதும் தற்போதைய வயதுகளின் கூட்டுத்தொகை 20 ஆகும். அப்பிள்ளைகளில் மூன்றாவதாக பிறந்த பிள்ளையின் தற்போதைய வயது யாது?

(1) 9 (2) 10 (3) 11

www.ikedu.lk

19. பெட்டி ஒன்றில் ஒரே அளவான பென்சில்கள் 100 இற்கும் 200 இற்கும் இடைப்பட்ட எண்ணிக்கையில் பென்சில்கள் இருந்தன. அவற்றுள் 3 இனைக் கழித்து எஞ்சியதை ஒருவருக்கு 4 வீதம் அல்லது 6 வீதம் அல்லது 7 வீதம் மீதியின்றி பகிர்ந்தளிக்க முடியும். பெட்டியிலுள்ள பென்சில்கள் எத்தனை?

(1) 168 (2) 170 (3) 171


20. எங்கள் வகுப்பிலுள்ள அதிகமான பிள்ளைகள் பெண்பிள்ளைகளாவர். வகுப்பிலுள்ள அனைத்து பெண்பிள்ளைகளும் மிதிவண்டியில் பாடசாலைக்கு வருகிறார்கள். எங்கள் வகுப்பில் மிதிவண்டியில் வரும் சில பிள்ளைகள் பெண் பிள்ளைகள் அல்ல. அதன்படி கீழே தரப்பட்டுள்ள கூற்றுகளில் மிகச்சரியான கூற்றைத் தெரிவு செய்க.

(1) எங்கள் வகுப்பிலுள்ள அனைத்து பிள்ளைகளும் பாடசாலைக்கு மிதிவண்டியில் வருகிறார்கள்.

(2) எங்கள் வகுப்பிலுள்ள சில ஆண் பிள்ளைகள் பாடசாலைக்கு மிதிவண்டியில் வருகிறார்கள்.

(3) எங்கள் வகுப்பிற்கு பேருந்தில் வரும் பிள்ளைகளும் இருக்கிறார்கள்.


21.



அருகிலுள்ள நட்சத்திர வடிவான பூங்காவொன்றில் ஒரு நேர்கோட்டு வழியே நேர்கோடுகள் இணையும் இடங்களில் ஒவ்வொன்று வீதம் நான்கு தூண்கள் நடப்பட்டுள்ளன. நபரொருவர் A பக்கத்திலிருந்து பார்க்கும்போது மூன்று தூண்களும் B பக்கம் இருந்து பார்க்கும்போது ஐந்து தூண்களும் தென்பட்டால், அப்பூங்காவில் காணப்படுகின்ற தூண்களின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 20 (2) 15 (3) 10


22. பிராணிகள் (P), முலையூட்டிகள் (R), வௌவால் (Q), கிளி (S) ஆகியவற்றை வகைகுறிக்கக் காட்டும் உரு எது?



23. சரியாக நடுப்பக்கத்தில் இணைக்கும் கம்பியைப் பயன்படுத்தி ஆக்கக்கூடிய வகையில் 90 பக்கங்கங்களைக் கொண்ட அப்பியாசப் புத்தகத்தில் ஒன்றன் மீது ஒரு தாளை வைக்கும்போது ரேவதி என்ற மாணவி 23 ஆம் 24 ஆம் பக்கங்களுக்குரிய தாளை வைத்து இணைப்பதற்கு மறந்துவிட்டாள். அப்போது அதனுடன் புத்தகத்தில் வைக்கப்படாத வேறுதாள்களுக்குரிய இரண்டு பக்கங்களும் எவை?

(1) 67 உம் 68 உம் (2) 65 உம் 66 உம் (3) 63 உம் 64 உம்

24. கீழே தரப்பட்டுள்ள A, B, C மூன்று உருக்களைப் பாருங்கள்



உரு A உரு B உரு C

மூன்று உருக்களிலும் இருக்கும் ஏதோவொரு பொதுப்பண்புக்கு ஏற்ப இவற்றில் இரண்டு உருக்களைச் சோடியாக்க முடியும். அந்தச் சோடி

(1) A உம் B உம் (2) A உம் C உம் (3) B உம் C உம்

25. வியாபாரி ஒருவர் ஐந்து மாம்பழங்களை நூறு ரூபாய்க்கு வாங்கி மூன்று மாம்பழங்களை நூறு ரூபாவிற்கு விற்றார். அவர் நாள் ஒன்றில் 600 ரூபாவிற்கு மாம்பழங்களை வாங்கி விற்றதால் அவருக்குக் கிடைக்கும் இலாபம் எவ்வளவு?

(1) 600 (2) 500 (3) 400

www.ikeduk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில்
கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

26. ஆற்றங்கரை ஓரத்தில் பத்து மின்விளக்கு கம்பங்கள் சமஇடைவெளியில் நடப்பட்டுள்ளன. இரண்டு மின்கம்பங்களுக்கு இடையில் ஓர் இருக்கை வீதம் வைக்கப்பட்டுள்ளது. ஓய்வுப் பொழுதைக் கழிப்பதற்காக மாலைவேளையில் சென்ற குறித்த குழுவினர் முதலாவது மின்விளக்கு கம்பத்திலிருந்து ஐந்தாவது மின்விளக்கு கம்பம் வரை சம எண்ணிக்கையில் 12 பேர் அமர்ந்தனர். ஏனையவர்கள் பத்தாவது கம்பம் வரை சம எண்ணிக்கையில் இருவர் வீதம் அமர்ந்தனர். இங்கு இருக்கைகளில் அமர்ந்திருப்பவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 27 (2) 22 (3) 20

27. தரம் ஐந்து வகுப்பறையில் கற்கும் மாணவர்களின் உயரங்கள் தொடர்பான மூன்று கூற்றுகள் A, B, C எனத் தரப்பட்டுள்ளன.

A - வகுப்பில் 35 மாணவர்கள் உள்ளனர்.

B - 20 மாணவர்கள் சுரேஷை விட உயரம் கூடியவர்கள்.

C - வகுப்பிலுள்ள பெண்பிள்ளைகள் அனைவரும் சுரேஷை விட உயரம் குறைந்தவர்கள் எனின், வகுப்பிலுள்ள பெண்பிள்ளைகளின் எண்ணிக்கை 15 இலும் குறைவாகும் என்பதைத் தீர்மானிப்பதற்காக அமையும் கூற்றுகள் எவை?

(1) A உம், B உம் (2) B உம், C உம் (3) A உம், B உம், C உம்


28. குறித்தவொரு சாதாரண வருடத்தில் தொழிலாளர் தினம் கொண்டாடப்படும் நாளானது அவ்வருடத்தின் எத்தனையாவது நாளாகும்?

(1) 120 (2) 121 (3) 122

29. பவி, சீலன், சுருதி, கோகுல் ஆகிய நண்பர்களிடம் நிறப்பேனைகள் காணப்பட்டன. கோகுலை விட ஐந்து நிறப்பேனைகள் கூடுதலாக பவி கொண்டிருப்பதுடன் சுருதி சீலனை விட 10 நிறப்பேனைகள் குறைவாகக் கொண்டிருந்தாள். பவியும் சுருதியும் சமமான நிறப்பேனைகளை கொண்டிருந்தனர். எனின், ஆகக்கூடிய பேனைகளை கொண்டிருப்பவர் யார்?

(1) சுருதி (2) கோகுல் (3) சீலன்

30.



உருவில் பாத்திரம் P இல் இடப்பட்டுள்ள மூன்று தகரப்பேணிகளையும் பாத்திரம் Q ஐப் பயன்படுத்தி பாத்திரம் R இற்கு அதே ஒழுங்குமுறையில் இருக்கும் விதத்தில் பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைய மாற்ற வேண்டும்.

- ஒரு தடவையில் ஒரு தகரப்பேணி மட்டுமே அகற்றப்பட முடியும்.
- எப்போதும் மேலே உள்ள தகரப்பேணியே அகற்றப்பட முடியும்.
- அகற்றப்பட்ட தகரப்பேணியை கையில் வைத்திருக்காது பாத்திரத்தில் இடுதல் வேண்டும்.
- பாத்திரத்தில் சிறிய தகரப்பேணிக்கு மேலே பெரிய தகரப்பேணியை வைக்க முடியாது.

இதற்கேற்ப மூன்று தகரப்பேணிகளையும் பாத்திரம் R இற்கு மாற்றுவதற்கு செய்ய வேண்டிய மிகக் குறைந்தளவு மாற்றுதல்களின் எண்ணிக்கை எத்தனை?

(1) 4 (2) 6 (3) 7

www.ikedu.lk

31. பத்து குயவர்கள் பத்து குடங்களை வனைவதற்கு 30 நிமிடங்கள் எடுக்கும். எனின், ஒரு குயவன் இரண்டு குடங்களை வனைவதற்கு எவ்வளவு நேரம் எடுக்கும்?

(1) 6 நிமிடம் (2) 30 நிமிடம் (3) 60 நிமிடம்

32. ஒரு வகுப்பில் உள்ள மாணவர் தொகை 34 ஆகும். அவர்களில் 13 பேர் நீலநிறப்பேனையையும் 10 பேர் கறுப்பு நிறப்பேனையையும் வைத்துள்ளனர். 6 பேர் இரண்டு நிறப்பேனைகளையும் வைத்துள்ளனர். எனின், எந்த நிறப்பேனையையும் கொண்டிராத மாணவர்கள் எத்தனை?

(1) 5 (2) 11 (3) 17

33. R = 2, S = 3, T = 4, U = 5, V = 6 எனின் பின்வரும் ஆங்கில எழுத்து பிரசினத்தை தீர்க்க.

U U R
- R R V

(1) S S V (2) R S V (3) S R V

34. மிருகக்காட்சி சாலை ஒன்றில் இரண்டு கூடுகளில் பச்சை வர்ணக்குருவிகளும் மஞ்சள் வர்ணக்குருவிகளும் காணப்படும் விதம் பின்வருமாறு

- A கூட்டில் உள்ள பச்சை வர்ணக்குருவிகளின் எண்ணிக்கையின் அரைவாசி, பச்சை வர்ணக்குருவிகள் B கூட்டில் உள்ளன.
- A கூட்டில் உள்ள மஞ்சள் வர்ணக்குருவிகளின் எண்ணிக்கையின் இருமடங்கு மஞ்சள் வர்ணக்குருவிகள் B கூட்டில் உள்ளன.

இங்கு A கூட்டிலிருந்து இரண்டு பச்சை வர்ணக்குருவிகள் B கூட்டிற்கு பறந்து செல்லும்போது B கூட்டிலுள்ள மஞ்சள் வர்ணக்குருவிகள் இரண்டு A கூட்டிற்கு பறந்து செல்லும். எனின், இரு கூடுகளிலும் உள்ள குருவிகளின் மொத்த எண்ணிக்கையாக அமைக்கூடியது.

(1) 16 (2) 22 (3) 24

35. கீழே தரப்பட்டள்ள உருக்களை அவதானியுங்கள். எதிர்ப்பக்கம் (P - R, Q - S) ஆகும்.



வினாக்குறி உள்ள இடத்தில் வரவேண்டிய உரு எது?



(1) (2) (3)

36. அருகே உள்ள கட்டவலையைப் பாருங்கள்.

1	2	3
4	5	6
7	8	9

- இலக்கம் ஐந்து மாற்றம் செய்யப்படலாகாது.
- இலக்கம் ஒன்றிலிருந்து ஒரு கட்டம் வீதம் கடிகாரம் சுழலும் திசைவழியே முன்னோக்கி நகர்த்தவும்.
- பின்னர் முதலாவது நிரலையும் மூன்றாவது நிரலையும் நிரலாக மாற்றவும்.

மாற்றத்தின் பின்னர் இரண்டாவது நிரையில் உள்ள எண்ணை மாற்றத்தின் முன்னர் இருந்த இரண்டாவது நிரலில் உள்ள எண்ணுடன் கழிக்கும்போது பெறப்படும் விடை யாது?

(1) 98 (2) 99 (3) 396

37. காவேரி காலைவேளையில் கிழக்குத்திசை நோக்கி செல்லும்போது அவளது நண்பி தெற்குத்திசை நோக்கி பயணித்தாள். மாலையில் திரும்பி வரும்போது காவேரியின் நிழல் விழுவது?

(1) முன்னால் (2) பின்னால் (3) வலப்பக்கம்

www.ikeou.lk

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

zoom

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

www.lkedu.lk

38. பாடசாலையொன்றில் மாணவத் தலைவர் தெரிவுக்கு பின்வருமாறு நிபந்தனைகளுடன் 20 வினாக்கள் வழங்கப்பட்டன.

நிபந்தனை 1 - ஒன்று தொடக்கம் ஐந்து வரையிலான வினாக்களுக்கு சரியான வினாவொன்றுக்கு 5 புள்ளிகள் வழங்கப்படும். அத்தோடு ஐந்து வினாக்களும் சரியாக அமையும் சந்தர்ப்பத்தில் மாத்திரம் மேலதிக புள்ளி 5 வழங்கப்படும்.

நிபந்தனை 2 - ஆறு தொடக்கம் பத்து வரையான வினாக்கள் வரை சரியான வினாவொன்றுக்கு 4 புள்ளிகள் வழங்கப்படும்.


நிபந்தனை 3 - ஏனைய வினாக்கள் பத்திற்கும் மொத்தப்புள்ளி 20 வழங்கப்படும். அவற்றில் தவறான வினாவிற்கு பெற்ற புள்ளியிலிருந்து ஒன்று குறைக்கப்படும்.

பரீட்சைக்குத் தோற்றிய சுனில் என்ற மாணவன் ஆறாம் பத்தாம் வினாக்கள் உட்பட 12, 13 ஆகிய வினாக்கள் தவறாக பதிலளித்தான். எனின், அவனால் பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்தப்புள்ளி யாது?

(1) 49 (2) 51 (3) 56

39.





மேலே தரப்பட்டுள்ள பெட்டியில் 12 மாபிள்கள் உள்ளன. அவற்றில் ஒரு மாபிள் மாத்திரம் நிறை கூடியது.

நியதி 1 - அனைத்து மாபிள்களும் குறைந்தது ஒரு தடவை நிறுக்கப்பட வேண்டும்.

நியதி 2 - சம நிறையுள்ள மாபிள்களை அகற்ற முடியும்.

நியதி 3 - இறுதியில் நிறுக்கப்பட்ட ஒரு மாபிள் மாத்திரம் மீண்டும் நிறுக்கப்படத் தேவையில்லை.

மேற்படி நியதியின்படி படிக்கற்களைப் பயன்படுத்தாமல் தட்டுத்தராசின் மூலம் கூடிய நிறையுள்ள மாபிளைத் தெரிவு செய்ய நிறுக்கப்பட வேண்டிய ஆகக்குறைந்த தடவைகள் எத்தனை?

(1) 2 (2) 3 (3) 4

40. கீழே கட்டத்தினுள் உள்ள எழுத்துக்களை அவதானிக்கவும்.

ஊ	த்	ந	தை	தீ
க	ந்	ம்	எ	
ஆ	தா	ச்	வா	ற்

- இது மூன்று எழுத்துச் சொல்லாகும்.
- கட்டத்தில் உயிர் எழுத்தாகவும் ஓரெழுத்துச் சொல்லாகவும் அமையும் எழுத்து முதலாவது எழுத்தாகும்.
- மெல்லின எழுத்துக்களில் ஒன்று இரண்டாவது எழுத்தாகும்.
- இறுதி எழுத்தை இடும்போது ஒரு பிராணியின் பெயர் சொல்லாக அமையும்.

இத்தகவல்களுக்கு ஏற்ப பொருத்தமான விடை யாது?

(1) ஆமை (2) ஆந்தை (3) நத்தை

* * *

www.ikedu.lk

முழுப்பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

2022

ஆசிரியர் : ஏ.எம். சஹ்ரஸ்
077 16 16 340

அறிவுத்தாரகை 5
ARIVUTHTHARAHAI

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOOLS AND FOR THE AWARD OF BURSARIES, MODEL - 2022

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை - 2022

கருத்தரங்குத் தொடர் 11

வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண் : .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.** (சில வினாக்களில் உப பகுதிகள் உள்ளன.)
* விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் **புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
* விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும் போது **கோட்டினை மாத்திரம் இடுக.**
* மூன்று விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

வினாத்தாள் - II இற்கான புள்ளித்திட்டம்

1.	6	11.	2	21.	2
2.	1	12.	2	22.	4
3.	2	13.	2	23.	2
4.	1	14.	1	24.	4
5.	1	15.	1	25.	2
6.	1	16.	2	26.	4
7.	2	17.	2	27.	2
8.	2	18.	2	28.	2
9.	2	19.	2	29.	2
10.	2	20.	2	30-59	30

85 - 100 மிக நன்று

75 - 85 நன்று

75 கீழ் - அதிகம் முயற்சிக்கவும்

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீடு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	V/II/T/CH

[பக். 2 ஐப் பார்க்க

www.ikeou.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில்
கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

1. பின்வரும் பந்தியை நன்றாக வாசியுங்கள்.

இயேசு கிறிஸ்துவின் பிறப்பைக் குறிக்கும் பண்டிகையே நத்தார் ஆகும். ஒவ்வொரு வருடமும் மார்கழி மாதம் இருபத்தைந்தாம் திகதி இதனைக் கொண்டாடுவோம். இப்பண்டிகையின்போது விசேடமாக நத்தார் மரங்களை மின்விளக்குகளால் அலங்கரிப்போம். இரவு வேளைகளில் இம்மரங்கள் உலகையே ஒளி மயமாக்கும். அன்றைய தினம் நத்தார் தாத்தா வந்து பரிசுகள் வழங்கி சிறுவர்களை மகிழ்விப்பார். புத்தாடை அணிந்து நாம் தேவாலயத்திற்குச் சென்று வழிபடுவோம். உற்றார் உறவினர்களுக்கு நத்தார் கேக், பாற்சோறு மற்றும் இனிப்புப் பண்டங்கள் கொடுத்து மகிழ்வோம்.

● **பந்தியை மாத்திரம் துணையாகக் கொண்டு விடையளிக்குக.**

(i) நத்தார் பண்டிகை எம்மாதத்தில் எந்தத் திகதியில் கொண்டாடப்படும்?

: .....

(ii) நத்தார் மரங்கள் எவற்றால் அலங்கரிக்கப்படும்?

: .....

(iii) **'இறப்பை'** என்பதன் எதிர்ச் சொல்லைத் தெரிவு செய்து எழுதுக?

: .....

(iv) பந்தியில் இடம்பெறும் இணைமொழியை எழுதுக?

: .....

(v) **'புத்தாடை'** என்ற சொல்லைப் பிரித்து எழுதுக?

: .....

(vi) பந்தியில் இடம்பெறும் உயர்திணை தன்மைப் பன்மைப் பெயர்ச்சொல்லை எழுதுக?

: .....

2. அ.்றிணை, ஒருமை, படர்க்கைப் பெயர்ச் சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

கதிரை பறந்தது எடுத்தான் அவள் பந்துகள்

3. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக் கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக் குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) அஜந்தா ஓவியங்கள் ..... (பழமை / பழைமை) வாய்ந்தன.

(ii) பாலாவும் சுனிலும் தேசிய கீதத்தைப் ..... (பாடினார் / பாடினார்கள்)

4. சுருக்கக் குறியீட்டின் விரிவை எழுதுக.

இ.ரூ.கூ : .....

5. தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.

கழிவுநீர் / நுளம்புகள் / நிற்பதால் / ஓடாது / தேங்கி / பெருகுகின்றன

: .....

www.lkedu.lk

சுட்டெண் : .....

6. பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.

எக்காளம் கஞ்சிரா தவண்டை உடுக்கை தம்பட்டம் என்பன கிராமிய இசைக்கருவிகளாகும்

7. (i) பின்வரும் பழமொழியைப் பூர்த்தி செய்யப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

அளவுக்கு மிஞ்சினால் ..... நஞ்சு.

(ii) பின்வரும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான பழமொழியைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

மனநிறைவே சிறந்த செல்வம்

: .....

8. பின்வரும் சொற்றொடர்கள் குறிக்கும் தனிச்சொல்லைத் தெரிவு செய்து அதன்கீழ்க் கோடிடுக.

(i) தனது செல்வங்களை பிறருக்கு ஈயாதவன் ..... (உலோபி / ஊதாரி)

(ii) அரசன் வாழும் இடம் ..... (ஆச்சிரமம் / அரண்மனை)

9. வாக்கியத்திலுள்ள எழுவாய் பயனிலைத் தொடர்புகள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் அடையாமிடுவோம்.

(i) நாம் அனைவரும் பேருந்தில் கதிர்காமத்திற்குப் போனோம். (.....)

(ii) எமக்கு கல்வியும் ஒழுக்கமும் இரு கண்களைப் போன்றது. (.....)

10. (i) சேர்த்தெழுதுக. மண் + பானை : .....

(ii) பிரித்தெழுதுக. ஐந்நூறு : .....

11. பின்வரும் ஆங்கிலச் சொல்லின் கருத்தைத் தமிழில் எழுதுக.

(i) Hospital : ..... (ii) Rainbow : .....

12. பின்வரும் ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

(i)  : .....

(ii)  : .....

13. பின்வரும் சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.

(i) going / I / out / am : .....

(ii) school / This / is / my : .....

14. 'தாகதர' எனும் சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

: .....

www.ikedu.lk

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

உங்களுக்குத் தண்ணீர் வேண்டுமா? : .....

16. 3594 என்ற எண்ணில்,

(i) இலக்கம் 5 உள்ள இடம் யாது? : .....

(ii) இலக்கம் 3 இனால் வகைகுறிக்கப்படும் பெறுமானம் யாது? : .....

17. தரப்படும் எண்களை ஏறுவரிசையில் எழுதுக.

943, 934, 974, 946 : ....., ..., ..., ...

18. தரப்பட்டுள்ள ஒவ்வொரு எண்கோலத்திலும் உள்ள இடைவெளிக்குப் பொருத்தமான எண்ணை எழுதுக.

(i) 4, 9, 14, 19, ..., 29 (ii) 160, 80, 40, 20, ..., 5

19. இந்த உருவுக்கு எத்தனை சமச்சீர் கோடுகளை வரையலாம்.




: .....

20. ஒரு வகைப் பணியாரங்களைத் தயாரிப்பதற்கு 2 kg 400 g மா தேவை. வீட்டில் 1 kg 600 g மா மாத்திரம் உள்ளது. மேலும் எவ்வளவு மா தேவை?

: ..... g

21. உருவில் $\frac{1}{2}$ பங்கை (பென்சிலால் அல்லது பேனையால்) நிறந்தீட்டுக.



22. ஒரு பாடசாலையில் 1350 ஆண் மாணவர்களும் 618 பெண் மாணவிகளும் காணப்பட்டனர்.

(i) பாடசாலையில் உள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கை யாது?

: .....

(ii) ஆண், பெண் மாணவர்களுக்கிடையிலான வித்தியாசம் யாது?

: .....

23. ஒரு கொத்தில் 3 பலூன்கள் வீதம் 60 பலூன் கொத்துகளைப் பயன்படுத்தி பிரதான மண்டபம் ஒன்று அலங்கரிக்கப்பட்டுள்ளது. தொங்கவிடப்பட்டுள்ள பலூன்களின் மொத்த எண்ணிக்கை யாது?

: .....

24. பின்வரும் உரோம எண்களை இந்து அராபிய எண்ணில் தருக.

(i) xi : .....

(ii) vii : .....

www.lkedu.lk

25. 12 மணித்தியாலக் கடிகாரம் பி.ப. 6 . 10 எனக் காட்டும்போது 24 மணித்தியாலக் கடிகாரம் காட்டும் நேரம் யாது?

: .....

26. 500 g சீனி ரூபாய் 37.50 வீதம் 1 kg சீனியும் தேயிலை 200 g ரூபாய் 140 வீதம் 800 g தேயிலையும் வாங்கிக் கொண்டு கரீமா ரூபாய் 1000 காசுத்தாளை கடைக்காரனுக்கு வழங்கினாள்.

(i) கரீமா வாங்கிய பொருள்களுக்கான மொத்தப் பணம் எவ்வளவு?

ரூபாய் ..... சதம் .....

(ii) கரீமாவுக்கு கிடைக்கும் மீதிப்பணம் எவ்வளவு?

ரூபாய் ..... சதம் .....


27. ஒரு கலனில் 3 l 500 ml நீர் உள்ளது. அதிலிருந்து நீரைக் குடிப்பதற்கு எடுத்த பின்னர் எஞ்சியிருந்த நீரின் அளவு 2 l 700 ml ஆகும். குடிப்பதற்கு எடுத்த நீரின் அளவு யாது?

: ..... ml

28. ஒரு மேசையின் நீளம் 2 m 50 cm ஆகும். அதன் அந்தத்தில் 1 m 75 cm நீளமுள்ள வேறொரு மேசை வைக்கப்பட இரு மேசைகளினதும் மொத்த நீளம் யாது.?

: ..... m ..... cm

29. நான்கு வகுப்பில் கணிதப் பாடத்தை விரும்பும் மாணவர்கள் பற்றிய தகவல்கள் கீழே வரைபில் தரப்பட்டுள்ளன.



நான்கு வகுப்புகளிலும் கணித பாடத்தை விரும்பும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

: .....

● **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30. இலவசக் கல்வியின் தந்தை யார்?



(1)



(2)



(3)

31. இலங்கைத் தேசியக் கொடியில் பச்சை நிறப்பட்டி குறித்து நிற்பது,

(1) தமிழ் மக்களை (2) முஸ்லிம் மக்களை (3) சிங்கள மக்களை

32. தாவர உண்ணி என்பது?

(1) மாமிசத்தை உண்ணுபவை

(2) தாவர பாகங்களை உண்ணுபவை

(3) தாவர, மாமிச உணவுகளை உண்ணுபவை

www.lkedu.lk



zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

33. மிகக்கூடிய எண்ணிக்கையிலான இதழ்களைக் கொண்டுள்ள மலர் எது?

(1) சூரியகாந்தி (2) நாகமலர் (3) செவ்வரத்தை

34. இரும்பால் ஆக்கப்பட்டு மரக்கைபிடி காணப்படும் கருவிகளுள் **ஒன்றல்லாதது.**

(1) மண்வெட்டி (2) கோடரி (3) அலவாங்கு

35. குறைந்தளவு காலாவதித் திகதி கொண்ட உணவுப்பொருள்

(1) யோக்கட் (2) பிஸ்கட் (3) பால்மா

36. உணவு உட்கொள்ளும்போது பின்பற்றக்கூடிய நல்லபழக்கமொன்று ,

(1) கீழே உள்ள பிராணிகளுக்கு உணவு கொடுத்தல்

(2) தேவையான அளவு உணவை மாத்திரம் பகிர்ந்து கொள்ளல்

(3) சப்புக்கொட்டாதவாறு உணவை நன்றாக அரைத்து உண்ணல்

37. இலங்கைத் தேசியக்கொடியில் காணப்படும் மூலவர்ணங்கள் எத்தனை?

(1) இரண்டு (2) மூன்று (3) நான்கு

38. காகம், பூனை என்பன,

(1) இலையுண்ணிகளாகும் (2) ஊனுண்ணிகளாகும் (3) அனைத்துமுண்ணிகளாகும்

39. மழைவீழ்ச்சி, காற்றுவீசும் திசை ஆகியவற்றை அளக்க பயன்படும் கருவி முறையே,

(1) காற்றுத் திசைகாட்டி, மழைமானி

(2) மழைமானி, காற்று வேகமானி

(3) மழைமானி, காற்றுத் திசைகாட்டி

40. வீட்டுத்தோட்டப் பயிர்களுக்கு இடுவதற்கு மிகப்பொருத்தமான பசளை

(1) யூரியா (2) கூட்டெரு (3) பொட்டாசியம்

41. மழையுடன் கூடிய இடிமுழக்கம் உள்ள நேரத்தில் பாதுகாப்பிற்காக எம்மால் மேற்கொள்ளக் கூடிய சரியான நடவடிக்கை எது?

(1) வீட்டினுள் கட்டிலின் மீது இருத்தல்

(2) மின்குமிழ்களை அணைத்துவிடல்

(3) பாதணியை அணிந்து வெளியே செல்லுதல்

42. கொல்லன் கம்மாலையில் காணக்கிடைக்கும் உபகரணம்?

(1) அத்தாங்கு (2) துருத்தி (3) மின்சோதிப்பான்

43. மாற்றுமுறைப் பயிர்ச் செய்கையின் நன்மை

(1) பெரிய இடம் தேவைப்படும்

(2) பராமரிப்பது இலகு

(3) தேவைக்கு ஏற்ப இடம்மாற்ற முடியாது

44. கட்புல ஊடகம் ஒன்று.

(1) தொலைக்காட்சி (2) வானொலி (3) பத்திரிகை

www.lkedu.lk

45. கறுப்பு நிறத்தைப் பெற கலக்க வேண்டிய நிறங்கள்?

(1) சிவப்பு, நீலம், ஊதா (2) சிவப்பு, நீலம், மஞ்சள் (3) நீலம், மஞ்சள், பச்சை

46. 

உருவில் உள்ளவர்,

(1) ஒரு தத்துவஞானி

(2) பிரபல்யமான வானியல் விஞ்ஞானி

(3) சுதந்திர போராட்டத் தலைவர்

47. இரப்பையழற்சி நோய் ஏற்பட ஏதுவான காரணி,

(1) மாப்பொருள் உணவுகளை அதிகம் உண்ணல்

(2) குறித்த வேளையில் உணவு உண்ணாதிருத்தல்

(3) செயற்கை நிறமூட்டப்பட்ட உணவுகளை உட்கொள்ளல்

48. உலக மரபுரிமையாக கணிப்புப் பெற்ற சிங்கராஜவனம் காணப்படும் மாகாணம்.

(1) சப்பிரகமுவ மாகாணம் (2) ஊவா மாகாணம் (3) மத்திய மாகாணம்

49. அதிவேகபாதையில் செல்வதற்கு அனுமதிக்கப்படாத வாகனங்கள்

(1) முச்சக்கர வண்டி, மகிழுந்து

(2) முச்சக்கர வண்டி, உந்துருளி

(3) மிதிவண்டி, பேருந்து

50. சூரிய ஒளி நன்றாக விழும் இடத்தில் ஒரு மாமரத்தின் கிளை ஒரு பரிசோதனைக்காகப் பொலித்தீன் பையினால் மூடிக்கட்டி வைக்கப்பட்டது. ஏறத்தாழ ஒரு மணித்தியாலத்துக்குப் பின்னர் அதனை அவதானித்த போது,

(1) அதன் இலைகள் வாடி இருக்கக் காணப்பட்டன.

(2) இலைகள் ஓரளவு மஞ்சள் நிறமாகிக் காணப்பட்டன.

(3) பையினுள்ளே சிறிய நீர்த்துளிகள் படிந்திருக்கக் காணப்பட்டன.

51. உடலுக்கு சக்தி தரக்கூடிய உணவு வகையான ஈரப்பலாக்காய்க்கு பதிலாக உட்கொள்ளக் கூடிய உணவு.

(1) மரவள்ளி (2) முட்டை (3) சோயாஅவரை

52. 'மீள் சுழற்சிக்கு உட்படுத்தக் கூடிய அலுமினியம்' என்பதைக் குறிக்கும் குறியீடு,



(1)



(2)



(3)

53. பொலித்தீன் பற்றிய பின்வரும் கூற்றுகளில் பிழையான கூற்றைத் தெரிவு செய்க.

(1) பொலித்தீனை எரிக்கும்போது வெளியேறும் நச்சு வாயு நோய்களை உண்டாக்குகிறது.

(2) பொலித்தீன் விரைவாக உக்குவதற்கு மண் உதவுகின்றது.

(3) கைவிடப்பட்ட உணவு உள்ள பொலித்தீனை உண்பதால் விலங்குகள் இறக்கின்றன.

www.kedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

www.lkedu.lk

54. மகாவலிகங்கை கடலுடன் சங்கமமாகும் இடத்திற்கு அண்மையில் அமைந்துள்ள நகரம்.

(1) களுத்துறை (2) காலி (3) திருகோணமலை

55. தமிழர்களுடைய திருமணப் பழக்கவழக்கங்களுள் **ஒன்றல்லாதது.**

(1) நீர்நிரம்பிய குடம் ஒன்றினை முன்னே வைத்தல்

(2) மணமக்களை கால் கழுவி வரவேற்றல்

(3) நீர்நிரம்பி பாத்திரம் கொடுத்து விருந்துண்ண வரவேற்றல்

56. நாய் கடித்தால் முதலில் செய்யவேண்டியது

(1) கடித்த இடத்தில் துணியால் கட்டுதல்

(2) கடித்த இடத்தை சவர்க்காரமிட்டு சுத்தமான நீரினால் கழுவுதல்

(3) நோயாளியை மருத்துவரிடம் கொண்டு செல்லல்

57. இலங்கை அரச இலச்சினை பொறிக்கப்பட்டுள்ள விடயங்கள் இரண்டு

(1) உணவுப்பொதி, அடையாள அட்டை

(2) கடவுச்சீட்டு, நாணயக்குற்றி

(3) சாரதி அனுமதிப் பத்திரம், தனியார் பாடநூல்

58. இலங்கைக்கு சர்வதேச ரீதியில் புகழைப் பெற்றுக்கொடுத்த கிரிக்கெற் வீரர்?

(1) விராட்கோலி (2) பிரியந்த ஹேரத் (3) அர்ஜுனா ரனதுங்க

59. உள்ளத்தை இதப்படுத்தும் செயற்பாட்டின் படிமுறையில் முதலும் இறுதியும் முறையே,

(1) மனவுறுதி, மலர்வு

(2) உடலைத் தளர்த்துதல், மலர்வு

(3) மலர்வு, உடலைத் தளர்த்துதல்

60. 'நான் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்ததை கேட்டதும்.....' இதனைத் தொடர்ந்து நடைபெற்றிருக்கக் கூடிய விடயங்கள் மூன்று வாக்கியங்கள் இறந்தகாலத்தில் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

1. .....

.....

2. .....

.....

3. .....

.....

- * -**

www.lkedu.lk